**நலன்புரிகள் நலன்கள் சபை - 2023**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

நலன்புரிகள் நலன்கள் சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு சபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.
- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு சபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க

ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் சபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- சபை அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- சபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் மீதான கணக்காய்வு அவதானிப்புகள்**

**1.5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்.**

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அஸ்வெசும நலன்புரியாளர்களுக்கு கொடுப்பனவை மேற்கொள்ளும் தீர்மானத்தை அடிப்படையாகக் கொண்டு ரூபா 78,115,000 தொகை வங்கியிலிடப்பட்டு | அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவுகளின் போது SLIPS முறைமையினூடாக நலன்புரி படிகள் வங்கியிலிடப்பட்டது. தண்டப்பணங்களில் கணிப்பீட்டில் ஏற்பட்ட கணக்கீட்டு பிழையால் மீள்திருப்பப்பட்ட நிதியங்களை மாற்றுவதன் மூலம் கட்டுநிதிகளை | கணக்கீட்டு காலப்பகுதியுடன் தொடர்புடைய செலவீனங்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொழில்நுட்பப் பிரச்சனைகளால் மீளப்பெறப்பட்ட போதும் பொறுப்பாக கணக்கிடப்பட்டிருக்காமல் அதற்குப் பதிலாக உரிய காலப்பகுதியின் போதான செலவீனங்களாக கழிக்கப்பட்டிருந்தது. | பெற்றபின்னர் நிலுவைத்தொகைகளை செலுத்துவதற்கு முறைமையொன்று பின்பற்றப்படும். ஆகையால், நிலுவைத்தொகை நிதிக்கூற்றுக்களில் பொறுப்புக்களாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதற்குமேலதிகமாக, காசு அடிப்படையில் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டதுடன் இந்த சபையினூடாக முக்கியமான வேலையாக நடாத்தப்பட்டிருந்ததுடன் அதற்கான செலவினங்களிற்கான குறிப்பொன்று கவனயீர்ப்பை அதிகரிப்பதற்கான அளவீடாக நலன்புரிகள் நலன்கள் சபையின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்தது. இந்த விடயம் தொடர்பாக மேலதிக விரிவான தகவல்களை எதிர்காலத்தில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு உத்தேசிக்கப்பட்டது என அறியத்தருகின்றேன். | |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது சமூக பாதுகாப்பு வலையமைப்பு செயற்திட்டத்திடமிருந்து எடுக்கப்பட்ட அனைத்து சொத்துக்களையும் அடையாளங்கொள்ளாமல் ரூபா 16,607,288 தெகை மாத்திரம் பதிவுசெய்யப்பட்டிருந்தது. இந்தச் சொத்துக்களிற்காக மீளாய்வாண்டின் போது பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | சமூக பாதுகாப்பு வலையமைப்பு செயற்திட்டத்தின் முடிவுறுத்தலைப் பின்பற்றி 2023 யூன் 30 இல் சொத்துக்கள் இந்தச் சபைக்கு மாற்றப்பட்டிருந்தது. எனினும், முறையான பெறுமானத்தேய்வுக்குத் தேவையான கொள்வனவுகள் தொடர்பான செலவீனங்கள், கொள்வனவு காலப்பகுதி மற்றும் பெறுமதிகளை இனங்காணல் நலன்புரி சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. 2024 இல் அனைத்துச் சொத்துக்களும் மதிப்பிடப்பட்டு முறையான பெறுமானத்தேய்வு மேற்கொள்ளப்படும் என குறிப்பிடுகின்றேன். | முறையான சொத்துக்களை இனங்காணன்பதற்கும் கணக்கிடுவதற்கும் முயற்சி எடுக்கப்பட வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத்தீர்மானங்களுடன் இணங்காமை**

| கணக்காய்வு அவதானிப்பு | | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு** | **இணங்காமை** | | |
| (அ) 2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.2 ஆம் வழிகாட்டி. | செயல்நடவடிக்கைத்திட்டத்தை தயாரிக்கும் போது காலப்பகுதி, ஒவ்வொரு கடமைக்கு பொறுப்பான உத்தியோகத்தர்கள், கடமைகளின் இறுதி வெளியீட்டுகளுடன் தொடர்புடைய செயலாற்றல் குறிகாட்டிகள் போன்ற அதனுள் உள்ளடக்கப்பட வேண்டிய அடிப்படைத் தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தில் கணக்காய்வில் குறிப்பிடப்பட்ட குறைபாடுகளை திருத்தி 2024 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. | பொது முயற்சிகள் சுற்றறிக்கையிலுள்ள அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) 2023 சனவரி 27 ஆந் திகதிய 01/2023 ஆம் இலக்க பாதீட்டுச் சுற்றறிக்கையின் 04 ஆம் பிரிவு | 1503 மற்றும் 1509 செலவீன விடயங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகளிலிருந்து சம்பளங்கள் மற்றும் கூலிகளைக் கழித்த பின்னர் ஆகக்குறைந்த 6% இற்குச் சமமான ஏற்பாடுகள் சேமிக்கப்பட வேண்டியபோதும் இதுவரை இது மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லையென்பதுடன் மொத்தச் சேமிப்புக்கள் 0.4% ஆகவிருந்தது. | அஸ்வெசும நிகழ்ச்சித்திட்டத்தின் நலனாளிகளுக்கான கொடுப்பனவுகள் SLIPS முறையினூடாக மேற்கொள்ளப்பட்டமையால் SLIPS கட்டணங்கள் மற்றும் சேவர் தீர்வுகள் போன்றவற்றிற்கான குளோட் இடைவெளியினைப் பெறுவதற்கு செலவீன விடயம் 1509 இன் கீழ் குறிப்பிடத்தக்களவு செலவீனம் ஏற்படுத்தவேண்டியுள்ளது. இந்தச் செய்முறைக்கான போதியளவு ஏற்பாடு குறைந்தமை மேற்கூறப்பட்ட நிலைமைக்கு பங்களித்திருந்தது. ஆகையால், 2024 ஆம் ஆண்டிலிருந்து | பாதீட்டுச் சுற்றறிக்கையிலுள்ள அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | | அஸ்வெசும நிர்வாகச் செலவீனங்களிடமிருந்து இந்தச் செலவீனங்களை ஈடுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 20,751,771 தொகையான பற்றாக்குறை ஆனதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 256,799 தொகையானதால் நிதி விளைவுகளில் ரூபா 21,008,570 பின்னடைவொன்று அவதானிக்கப்பட்டது. செயற்பாட்டுச் செலவீனங்கள் அதிகரித்தமையே பின்னடைவிற்கு பிரதான காரணங்களாகவிருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மாவட்டச் செயலகங்களுக்காக ரூபா 33,983,216 மற்றும் 25 மாவட்டங்களிலுள்ள பிரதேச செயலகங்களுக்காக ரூபா 133,605,128 உள்ளடக்கி மேன்முறையீட்டுச் செயன்முறைக்காக ரூபா 167,588,344 செலவழிக்கப்பட்டிருந்தபோதும் 30% செயன்முன்னேற்ற மட்டத்துடன் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செய்முறை பூர்த்தியடையாதிருந்தது. | மேன்முறையீட்டினை முடிவுறுத்தல் மற்றும் எதீரீட்டுச் செயன்முறை அத்தகைய சபைக்கு நியமிக்கப்பட வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பிலான பிரச்சனைகள் மற்றும் தகவல் முறைமையை அபிவிருத்தி செய்வதிலுள்ள சவால்களால் செல்வாக்குச் செலுத்தியது. முறைமை அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஏற்பட்ட செயன்முறையால் எந்தவித காலதாமதமில்லாமலும் இந்த வருடம் செயன்மறை மன்னேற்றங்களை அடைவதற்கு சாத்தியமாகவுள்ளது. | மேன்முறையீட்டுச் செயன்முறை எந்தவித காலதாமதமில்லாமல் பூர்த்திசெய்யப்பட வேண்டும். |
| ( ஆ) | தகவல் முறைமை மற்றும் அஸ்வெசும நிகழ்ச்சித்திட்டத்தின் அபிவிருத்தியினை மதிப்பிடுவதற்குத் தேவையான செயன்முன்னேற்ற அறிக்கை உரிய காலத்தில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டிற்கான செயன்முன்னேற்ற அறிக்கை தற்போதளவில் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் ஆங்கிலம் மற்றும் தமிழுக்கான மொழிபெயர்ப்புக்கள் தற்போது நடைபெற்றுக்கொண்டுள்ளது. | செயன்முன்னேற்ற அறிக்கையை உரிய காலத்தில் சமர்ப்பிப்பதை உறுதிப்படுத்தி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | அஸ்வெசும நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு ஒருங்கிணைந்த நலன்புரி முகாமைத்துவ முறைமையை அங்கீகரிப்பதற்கு நான்கு நடவடிக்கைகள் தாபிக்கப்பட்டிருந்தபோதும் முறைமையின் அபிவிருத்தி நடவடிக்கைகள் தற்போதும் நடைபெற்றுகொண்டிருக்கின்றது. ஆகையால், 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தர அபிவிருத்தி முறைமை தாபிக்கப்பட்டிருக்காததுடன் அஸ்வெசும நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தகுதியுள்ள நலனாளிகளுக்கான நலன்புரிகளில் இழப்பினை ஏற்படுத்துகின்றது. | IWMS முறைமையிலுள்ள தற்போதுள்ள குறைபாடுகள் மற்றும் பலவீனங்கள் இனங்காணப்பட்டிருந்ததுடன் குறைபாடுகளை முன்வைக்கின்ற அனைத்து சாத்தியமான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருந்தது. அனைத்து தேவையான வசதிகள் மற்றும் உதவி உலக வங்கி உதவியின் கீழ் சமூக பாதுகாப்பு செயற்திட்டத்தினூடாக(எஸ்பீபீ) சபைக்கு வழங்கப்படுகின்றது என்பதை அறிவிக்க நான் விரும்புகின்றேன். | தரமான தகவலை பெறுவதற்குரிய முறைமையொன்று முறையான தாபிக்கப்பட வேண்டும். |

## 3.2 சர்ச்சைத் தன்மையான விடயங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அஸ்வெசும நிகழ்ச்சித்திட்டத்திற்கான நலனாளிகள் புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் குறிகாட்டிகள் 2019 இனை அடிப்படையாகக் கொண்டு தெரிவுசெய்யப்பட்டிருந்தனர். எனினும், சில குறிகாட்டிகள் மூலப்பிரதியை விட வித்தியாசமாகவிருந்ததுடன் அத்தகைய குறிகாட்டிகளை பிரயோகிப்பதற்கான அடிப்படை கணக்காய்வில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நலனாளிகளை தெரிவுசெய்வதற்கான அடிப்படை தொடர்பிலான விபரமான தகவல்கள் நிதி, பொருளாதார உறுதி மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சிற்கு தெளிவாக விளங்கப்படுத்தப்பட்டுள்ளது. | சரியான நிபந்தனை அஸ்வெசும நலனாளிகளை தெரிவு செய்வதற்காக தாபிக்கப்பட்டு பின்பற்றப்பட வேண்டும். |
| (ஆ) | 2019 ஆம் ஆண்டிற்கான நபருக்கான மாதாந்தச் செலவீனம் ரூபா 6,999 ஆக இருந்தபோதும், வருமானம் மற்றும் செலவீனம் தொடர்பிலான கணிசமான அளவீடுகள் பிரசுரிக்கப்பட்ட வர்த்தகமானி பத்திரிகையில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | கருத்து வழங்கப்பட்டிருக்கவில்லை. | தெரிவு செய்யப்பட்ட நிபந்தனைகள் அளவீடுகள் வர்த்தகமானி பத்திரிகையினூடாக பிரசுரிக்கப்பட வேண்டும். |
| (இ) | நலன்புரி நலனாளிகளை தெரிவு செய்வதற்கான அடிப்படை ஆண்டாக 2019 ஆம் ஆண்டு பயன்படுத்தப்பட்டது. எனினும், நலன்புரியாளர்களை நேரடியாக தெரிவுசெய்வதற்கான பணவீக்க | இந்தப் புள்ளிகள் இனங்காணப்பட்டதுடன் அதற்கிணங்க மதிப்பு எல்லையை தற்போதைய உரிய பணவீதத்தையும் குடியிருப்பாளர் வருமானம் | செலவீன ஆண்டானது நிபந்தனையைத் தாபிப்பதற்கான ஒழுங்கான காலரீதியில் |

| | | | |
|---|---|---|---|
| | விகிதத்தைத் தவிர்த்து 2019 இல் இது 3.53% ஆகவிருப்பதுடன் இது 2020, 2021, 2022 மற்றும் 2023 இல் 6.15%, 7.01%, 49.72% மற்றும் 67.4% வீதத்திற்கு முறையே குறிப்பிடத்தக்களவு அதிகரித்ததுடன் அதன் விளைவால், மதிப்பு எல்லையைத் தீர்மானிப்பதற்கான காலவரிசைப்படியான பிரயோகம் மற்றும் தற்போதைய உள்ளடக்கம் நிலையானதாகவிருக்கவில்லை. | மற்றும் செலவீனங்களை அடிப்படையாகக் கொண்டு எதிர்காலத்தில் தீர்மானிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தெரிவுசெய்யப்பட வேண்டும். |
| (ஈ) | குறித்த காலப்பகுதியில் நலனாளிகளை தெரிவுசெய்தல் மற்றும் மானிய வழங்கலை பூர்த்தி செய்வதை உறுதிப்படுத்துவதற்கு கண்காணிப்பு சபையால் ஒழுங்கமைக்கப்பட்ட மேற்பார்வை நடாத்தப்பட்டிருக்கவில்லை. | போதிய உத்தியோகத்தர் இல்லாமை, தகவல்களை அனுமதித்தலில் தாமதத்தை ஏற்படுத்தல் போன்றன உத்தியோகத்தரை வேலைக்கமர்த்தலை பிற்போட வைக்கின்றது. பொது சேவையிலிருந்த தற்காலிக அலுவலர்களை இத்தகைய வேலைகளைச் செய்வதற்கு அனுமதிக்கப்பட வேண்டியபோதும் போதியளவு உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. கழக நடவடிக்கைககளினால் உரிய நடவடிக்கைகளிலிருந்து பிரதேச செயலகங்களில் அனைத்து கள உத்தியோகத்தர்களுமில்லாமல் செய்தல் இந்த நடவடிக்கைகளை அமுல்படுத்தலில் காலதாமதத்தை ஏற்படுத்துகின்றது. அஸ்வெசும நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கலுடன் பொதுமக்கள் தடைகள், நாட்டினுள்ள பிரதேச செயலகங்களில் தடை ஏற்பட்டதுடன் இது காலதாமதத்தையும் ஏற்படுத்துகின்றது. கிராம உத்தியோகத்தர்கள் போன்ற கள உத்தியோகத்தர்களிடமிருந்து உதவி இல்லாமையினால் பிரதேச செயலகங்களினால் கடமைகளின் தற்போதைய இடைநிறுத்தல் மீண்டும் ஏற்படுகின்றது. அதற்குமேலதிகமாக, கிராமிய மட்டத்தில் தகவலை | நலனாளிகளை தெரிவுசெய்தல் மற்றும் கட்டணங்களை செலுத்தல் குறிப்பிட்ட காலப்பகுதியினுள் பூர்த்திசெய்யப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | சரிபார்ப்பதற்காக உத்தியோகத்தர் ஒருவர் இல்லாததால் (வியாபார நடவடிக்கை தொடர்பிலான கடமைகளிலிருந்து மீளெடுத்தல்) தெரிவுகுழுக்கள், மற்றும் முறைப்பாட்டுக் குமுக்களுக்கு அத்தகைய செய்முறையை துரிதப்படுத்துவதற்கு இது சவாலை ஏற்படுத்துகின்றது. | |
| (உ) நலனாளிகளுக்கு கொடுக்கப்பட்ட அஸ்வெசும நலனான ரூபா 78,115,000 மொத்தமானது 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பல்வேறுபட்ட காரணங்களால் திருப்பப்பட்டதுடன் தேவையான சரிபடுத்தல்கள் மேற்கொள்ளப்படாததுடன் அத்தகைய நன்மைகள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வழங்கப்பட்டிருக்கவில்லை. அதன் விளைவால், நலன்புரி நன்மைகள் மற்றும் சமூக பாதுகாப்பிற்கு உரித்துடைய குழுக்களுக்கு உதவியை வழங்குவதற்கு நலன்புரி நன்மையை தாபிக்கும் முக்கிய நோக்கமான பொருளாதார பிரச்சனை முடியும் வரை வெற்றிகரமாக அடைந்திருக்க முடிந்திருக்கவில்லை. | தகுதியான விவசாயிகளிற்குரிய நலன்புரி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட ஏற்பாட்டுக் கொடுப்பனவுகளை வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தது. எனினும் சில நலனாளிகள் கணக்குகளைத் திறக்காமல் பெறுனர்களுக்கிடையில் இரட்டை இனங்காணலிருத்தல் போன்ற பல்வேறு காரணங்களால் கொடுப்பனவுகள் மேற்கொள்ளாமல் இருப்பதற்கு காரணமாகவிருந்தது. இந்த மேலதிக கொடுப்பனவுகள் 2024 இல் மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | உரிய காலத்தில் நலன்கள் வழங்கப்பட வேண்டும். |

### 3.3 மனித வளங்கள் முகாமைத்துவம்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவ கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| 36 அனுமதிக்கப்பட்ட பதவியணிகளில் சிரேஸ்ட நிலைமைகளின் எண்ணிக்கையின் 75% ஆன சிரேஸ்ட நிலைப்பதவிகள் 12 மற்றும் இரண்டாந்தர நிலைமைகளின் அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையின் 94% இனை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற 15 இரண்டாந்தர நிலைமைகள் போன்றவற்றை உள்ளடக்கி மொத்தத்தின் 78% ஆன கணக்கீட்டிற்கான 28 வெற்றிடங்கள் இருந்தன. இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கோ பதவியணி மீளாய்வை தொடர்ந்து தேவையற்ற பதவியணியை குறைப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது சமூக நலன்புரி நலனாளிகள் சபையானது வெற்றிடப் பதவிகளை நிரப்புவதற்கும் தேவையற்ற பதவிகளை குறைப்பதற்கும் நடவடிக்கைகளை எடுத்திருந்தது. | தேவையான உத்தியோகத்தர்களை பராமரிப்பதை உறுதிப்படுத்துவதற்கு ஆட்சேர்ப்புகளை மேற்கொள்வதற்கும் தேவையான மாற்றங்களை மேற்கொள்வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |